திருச்செந்தூர் சிவன் கோயிலில் திருவிளக்கு பூஜை

விளக்கு பூஜையில் பங்கேற்றோர்.

திருச்செந்தூர், ஜன. 19: திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோயிலுடன் இணைந்த சிவன் கோயில் எனப்படும் ஆனந்தவல்லி அம்பாள் சமேத சிவக் கொழுந்தீஸ்வரர் கோயிலில் தை அமாவாசை, பத்ர தீபத் திருவிழாவை முன்னிட்டு திருவிளக்கு பூஜை ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சைவ வேளாளர் ஐக்கிய சங்கம் சார்பில் நடைபெற்ற இப்பூஜையில் சங்கத் தலைவர் ஆனந்தராமச்சந்திரன், செயலர் பொன்முருகேசன், பொருளாளர் வெங்கடாசலம், கணக்கர் சடகோபால், நிர்வாகஸ்தர்கள் பங்கேற்றனர். திரளான பெண்கள் விளக்கு பூஜை செய்து சுவாமி–அம்மனை வழிபட்டனர். பின்னர், அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. முன்னதாக, சுப்பிரமணிய சுவாமி கோயிலில் சுவாமி ஆறுமுகநயினாருக்கு சண்முகார்ச்சனை வழிபாடு நடைபெற்றது.

ஏற்பாடுகளை சங்க நிர்வாகிகள், இளைஞர் பேரவை, மகளிரணி, வெள்ளாளர் வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் செய்திருந்தனர்.

தூத்துக்குடியில் சுதேசி விழிப்புணர்வு யாத்திரை

சுதேசி உற்பத்தியாளர்களுக்கு விருதுகளை வழங்கினார் சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தின் அகில இந்தியத் தலைவர் தீபக்சர்மா.

தூத்துக்குடி, ஜன.19: சுதேசி எண்ணங்களை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில் தூத்துக்குடியில் சுதேசி விழிப்புணர்வு யாத்திரை திங்கள்கிழமை நடைபெற்றது.

கன்னியாகுமரியில் தொடங்கி காஷ்மீர் வரை சுதேசி விழிப்புணர்வு இயக்கம் நடத்தப்படுகிறது. அதன் ஒருஅங்கமாக, சுதேசி விழிப்புணர்வு இயக்கம், உன்னத் பாரத் அபியான், தூத்துக்குடி காமராஜ் கல்லூரி ஆகியவை இணைந்து தூத்துக்குடியில் திங்கள்கிழமை நடத்திய சுதேசி விழிப்புணர்வு யாத்திரைக்கு, ஏற்றுமதியாளர் பொன் வெங்கடேஷ் தலைமை வகித்தார். அனைவரும் சுதேசி குறித்த உறுதி மொழி ஏற்றனர்.

தொடர்ந்து, சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தின் அகில இந்தியத் தலைவர் தீபக்சர்மா, சுதேசி உற்பத்தியாளர்களுக்கு விருதுகளை வழங்கி பேசுகையில், 'அனைவரும் தாய் மொழியில் கையொப்பமிட வேண்டும், கலாசார உடை அணிய வேண்டும். சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும். தண்ணீரை சேமிக்க வேண்டும். நாட்டில் வேலையில்லா திண்டாட்டத்தை போக்க, 20 முதல் 29 வயதினர் வேலை தேடுபவர்களாக இல்லாமல், வேலை அளிப்பவராக மாறவேண்டும்'என்றார்.

நிகழ்ச்சியில், சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தைச் சேர்ந்த சத்யநாராயணன், பேச்சிமுத்து, செந்தில்குமார், முத்துக்குமார், காந்திராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கோவில்பட்டியில் விழிப்புணர்வு பொதுக்கூட்டம்

கூட்டத்தில் பேசிய பாண்டியனார் மக்கள் இயக்கத் தலைவர் வழக்குரைஞர் சீனி.

கோவில்பட்டி, ஜன. 19: தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் பாண்டியனார் மக்கள் இயக்கம் சார்பில் நாடார் அரசியல் விழிப்புணர்வு குறித்த பொதுக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இயக்கத் தலைவர் வழக்குரைஞர் சீனி தலைமை வகித்தார். வடக்கு மாவட்டச் செயலர் விஜயகணேஷ் முன்னிலை வகித்தார். மாநில இளைஞரணி தலைவர் விக்னேஷ் கார்த்தி, தமிழ்நாடு நாடார் கூட்டமைப்பின் தலைவர் அகரக்கட்டு லூர்து ஆகியோர் பேசினர். பாண்டியனார் மக்கள் இயக்க நிர்வாகிகள் ஜோயல், கணேஷ், ரமேஷ் , காளிமுத்துராஜ், சின்னத்தம்பி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சேரகுளத்தில் பட்டாசு பதுக்கல்: இளைஞர் கைது

தூத்துக்குடி, ஜன.19: தூத்துக்குடி மாவட்டம், சேரகுளம் காவல் நிலைய எல்லைக்குள்பட்ட பகுதியில் உரிமம் இன்றி விற்பனைக்காக பட்டாசுகளை பதுக்கி வைத்திருந்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

சேரகுளம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் முனியாண்டி மற்றும் போலீஸார் ஞாயிற்றுக்கிழமை அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். அப்போது, சுந்தரவேல் (32) என்பவர் உரிமம் இன்றி விற்பனைக்காக பட்டாசுகளை பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது. அவரை போலீஸார் கைது செய்து, பட்டாசுகளை பறிமுதல் செய்தனர்.

கோவில்பட்டி செண்பகவல்லி அம்மன் கோயிலில் ஜன. 25இல் மகா கும்பாபிஷேகம்

இன்று பூஜைகள் தொடக்கம்

கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு வண்ணம் பூசப்பட்டுள்ள ராஜகோபுரம், சாலகோபுரங்கள். (வலது) யாகசாலை பூஜைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள குண்டங்கள்.

கோவில்பட்டி, ஜன. 19: கோவில்பட்டி செண்பகவல்லி அம்மன் உடனுறை பூவனநாதசுவாமி கோயிலில் ஞாயிற்றுக்கிழமை (ஜன. 25) கும்பாபிஷேக விழா நடைபெறுகிறது. இதையொட்டி, செவ்வாய்க்கிழமை (ஜன. 20) மகா கணபதி ஹோமத்துடன் பூஜைகள் தொடங்குகின்றன.

இக்கோயிலில் 2012 ஜனவரியில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. 12 ஆண்டுகள் நிறைவடைந்ததையடுத்து, 2026 ஜனவரி 25இல் மகா கும்பாபிஷேகம் நடத்த அறங்காவலர் குழுவால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசின் அனுமதி பெறப்பட்டது. கடந்த ஏப். 30இல் பாலாலயம் செய்யப்பட்டு, கோயில் நிதி, உபயதாரர் நிதியிலிருந்து திருப்பணிகள் தொடங்கி, 98 சதவீதம் நிறைவடைந்துள்ளன.

இதனிடையே, கடந்த டிச. 25ஆம் தேதி கோயில் முன்புள்ள மைதானத்தில் கால்நாட்டப்பட்டு, 2 யாகசாலை பந்தல்கள், 42 யாக குண்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கும்பாபிஷேக விழா மகா கணபதி ஹோமத்துடன் செவ்வாய்க்கிழமை தொடங்குகிறது. காலை 7 மணிக்கு மேல் திருமுறைப் பாராயணம், பல்வேறு ஹோமங்கள், பூஜைகள் நடைபெறுகின்றன. புதன்கிழமை காலை 7 மணிக்கு மேல் சாந்தி ஹோமம், மாலை 5 மணிக்கு அங்குரார்ப்பணம், வாஸ்து சாந்தி, பிரவேச பலி, வியாழக்கிழமை (ஜன. 22) காலை பிரசன்ன பூஜை, கஜ பூஜை, மாலை 5 மணிக்கு முதல் கால யாகசாலை பூஜை, வெள்ளிக்கிழமை 2, 3ஆம் கால யாகசாலை பூஜைகள், சனிக்கிழமை 4, 5ஆம் கால யாகசாலை பூஜைகள் நடைபெறுகின்றன.

ஞாயிற்றுக்கிழமை (ஜன. 25) அதிகாலை 3 மணிக்கு 6ஆம் கால யாகசாலை பூஜை, 4.30 மணிக்கு யாகசாலையிலிருந்து கோயிலுக்கு கடங்கள் புறப்பாடு, 5 மணிக்கு மேல் ராஜகோபுரம், சாலகோபுரம், விமானங்கள், செண்பகவல்லி அம்மன்–பூவனநாதசுவாமி, பரிவார மூர்த்திகளுக்கு மகா கும்பாபிஷேகம், தீபாராதனை நடைபெறும். முற்பகல் 11 மணிக்கு மேல் மூலவர் சுவாமி–அம்மனுக்கு மகா அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை, இரவு 7 மணிக்கு பஞ்சமூர்த்திகள் புறப்பாடு உள்ளிட்டவை நடைபெறும்.

மகா கும்பாபிஷேக பூஜைகளை ரகு பரசுராம பட்டர் தலைமையில் சிவாச்சாரியார்கள் நடத்துகின்றனர்.

ஏற்பாடுகளை இணை ஆணையர் ம. அன்புமணி, துணை ஆணையர் ஜி. செல்வி, செயல் அலுவலர் (கூடுதல் பொறுப்பு) மா. பாலமுருகன், அறங்காவலர் குழுத் தலைவர் பி. எஸ்.ஏ. ராஜகுரு, அறங்காவலர்கள் சண்முகராஜ், நிருத்தியலட்சுமி, ரவீந்திரன், திருப்பதிராஜா, கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

கோவில்பட்டியில் அரசு தேர்வு பயிற்சி மையம் நாளை தொடக்கம்

கோவில்பட்டி, ஜன. 19: கோவில்பட்டியில் கம்மவார் சங்கம் சார்பில், அரசு தேர்வு பயிற்சி மையம் புதன்கிழமை தொடங்குகிறது.

இதுகுறித்து கோவில்பட்டி கம்மவார் சங்கத் தலைவர் விநாயகா மாரிச்சாமி வெளியிட்டுள்ள அறிக்கை:

கோவில்பட்டி கம்மவார் சங்கத்தினரால் மாதாங்கோவில் தெருவில் உள்ள கம்மவார் சங்க கட்டடத்தில் மாணவர், மாணவிகளுக்காக குரூப் 1, 2, 4, விஏஓ., உதவி காவல் ஆய்வாளர் உள்பட அரசுத் தேர்வுகளுக்கான சிறப்புப் பயிற்சி மையம் புதன்கிழமை தொடங்குகிறது.

இந்த மையத்தில் ஒவ்வொரு பாடத்துக்கும் தனித்தனி ஆசிரியர்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது. முதல் முயற்சியிலேயே வெற்றி பெற சிறந்த முறையில் பயிற்சி அளிக்கப்படும். நூற்றுக்கும் மேற்பட்ட தேர்வுகள் நடத்தப்படும். மிகக் குறைந்த கட்டணமே வசூலிக்கப்படும். இந்த சிறப்புப் பயிற்சி மையத்தை மாணவர், மாணவிகள் முறையாகப் பயன்படுத்தி பயனடையுமாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குமரி முக்கடல் சங்கமத்தில் அம்மனுக்கு ஆராட்டு

முக்கடல் சங்கமத்தில் அம்மனுக்கு நடைபெற்ற ஆராட்டு வைபவம்.

கன்னியாகுமரி, ஜன. 19: தை அமாவாசையை முன்னிட்டு முக்கடல் சங்கமத்தில் பகவதியம்மனுக்கு ஞாயிற்றுக்கிழமை இரவு ஆராட்டு வைபவம் நடைபெற்றது.

தை அமாவாசையன்று பக்தர்கள் புனித நீராடி பகவதியம்மனை வழிபட்டனர். இதற்காக, கோயில் நடை அதிகாலை 3.30 மணிக்கு திறக்கப்பட்டு, அம்மனுக்கு பல்வேறு சிறப்பு பூஜைகள், அபிஷேகங்கள் நடைபெற்றன. இரவு 8.30 மணிக்கு வெள்ளிக் கலைமான் வாகனத்தில் அம்மன் எழுந்தருளி வீதியுலா வருதலும், அதைத் தொடர்ந்து முக்கடல் சங்கமத்தில் அம்மனுக்கு ஆராட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றன. பின்னர், கோயிலின் கிழக்கு வாசல் வழியாக அம்மன் கோயிலுக்குள் பிரவேசித்தார்.

தொடர்ந்து, அம்மன் வெள்ளிப் பல்லக்கில் எழுந்தருளி கோயிலின் உள் பிரகாரத்தை 3 முறை வலம் வருதல், வெள்ளி சிம்மாசனத்தில் தாலாட்டு நிகழ்ச்சி, அத்தாழ பூஜை, ஏகாந்த தீபாராதனை ஆகியவை நடைபெற்றன.

தூத்துக்குடியில் போலீஸார்–கம்யூனிஸ்ட்டுகள் இடையே வாக்குவாதம்

தூத்துக்குடி, ஜன. 19: தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளிப்பதற்காக வந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள், போலீஸார் இடையே திங்கள்கிழமை கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு மனு அளிக்க திங்கள்கிழமை வந்தனர். ஆட்சியர் அலுவலக வாயில் அருகே நின்று பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுக்க முயன்றபோது, அந்த வழியாக வந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன் வாகனம், போக்குவரத்தில் சிக்கியது. இதனால், ஆத்திரமடைந்த போலீஸார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகளை நிற்க விடாமல், பத்திரிகையாளர்களுக்கு பேட்டி கொடுக்க அனுமதி மறுத்தனர்.

இதனால், இரு தரப்பினரிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் சமாதானம் ஏற்பட்டதையடுத்து, இந்திய கம்யூனிஸ்ட் நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கச் சென்றனர். மனு அளித்த பிறகு மாற்று இடத்தில் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்தனர்.

ஸ்ரீ வெங்கடேஸ்வரபுரம் ஊராட்சியில் ரூ.15. 20 லட்சத்தில் திட்டப் பணிகள் தொடக்கம்

சாலை அமைக்கும் பணியை தொடக்கிவைக்கிறார் ஊர்வசி எஸ். அமிர்தராஜ் எம்எல்ஏ.

சாத்தான்குளம், ஜன. 19: சாத்தான்குளம் வட்டம், ஆழ்வார் திருநகரி ஒன்றியம், ஸ்ரீ வெங்கடேஸ்வரபுரம் ஊராட்சியில் ரூ.15. 20 லட்சம் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடங்கின.

ஸ்ரீ வெங்கடேஸ்வரபுரம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதி ரூ.8.30 லட்சத்தில் ரேஷன் கடை முதல் செங்கன் வீடு வரை புதிய பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி, சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.6.90 லட்சத்தில் சாலைப்புதூரில் புதிய பயணிகள் நிழற்குடை கட்டும் பணி ஆகியவற்றுக்கு ஊர்வசி எஸ். அமிர்தராஜ் எம்எல்ஏ அடிக்கல் நாட்டி தொடங்கிவைத்தார்.

தொடர்ந்து மீரான்குளம், சாலைப்புதூர் பகுதி இளைஞர்களுக்கு கிரிக்கெட், வாலிபால் விளையாட்டு உபகரணங்களை வழங்கினர். மேலும், மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், ஆழ்வார் திருநகரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜா, அன்றன், தூத்துக்குடி தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவர் சங்கர், ஆழ்வார்திருநகரி வட்டாரத் தலைவர்கள் கோதண்டராமன், ரமேஷ் பிரபு, சிவபெருமாள், ஸ்ரீவைகுண்டம் வட்டாரத் தலைவர்கள் ஜெயராஜ், ஜெயசீலன், தூத்துக்குடி தெற்கு மாவட்ட எஸ்.சி., எஸ்.டி. பிரிவுத் தலைவர் முத்துராஜ், ஸ்ரீவைகுண்டம் வழக்குரைஞர் பாலசுப்ரமணியன், பேய்குளம் பால்ராஜ், மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி மாரியம்மாள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ப. ஜீவானந்தம் நினைவு நாள்: இந்திய கம்யூனிஸ்ட் பிரசார இயக்கம்

நாகர்கோவில், ஜன. 19: ப. ஜீவானந்தம் நினைவு நாளை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தோவாளையில் வாகனப் பிரசார இயக்கம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மாவட்டச் செயலர் தா. சுபாஷ் சந்திரபோஸ் தலைமை வகித்தார். ஜி. சுரேஷ் மேசிய தாஸ், எஸ். ராஜீ, எப். மரியதாஸ், பொருளாளர் பி. தாமரைசிங் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பிரசார இயக்கத்தை மாநிலக் குழு உறுப்பினரும், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநிலச் செயலருமான தா. அறம் தொடங்கி வைத்தார். வழக்குரைஞர் டி. இசக்கிதுரை சிறப்புரையாற்றினார். ஒய். புஷ்பராஜ், சி. வாசு, கே. தங்க வேல்முருகன் ஆகியோரின் மக்களிசையும், பறை இசையும் நடைபெற்றது. பிரசார இயக்கத்தில் மக்களிடம் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. மாவட்ட துணைச் செயலர் எஸ். அனில்குமார் நிறைவுரையாற்றினார்.

மாவட்டக் குழு உறுப்பினர்கள் வி. அருள்குமார், கே. செல்வராணி, நாகர்கோவில் மாநகரச் செயலர் கே. நாகராஜன் ஆகியோர் பிரசாரப் பயணத்தை வழிநடத்தினர். அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் மாநில துணைச் செயலர் எஸ். சுந்தரம், கலை இலக்கிய பெருமன்ற மாநிலத் தலைவர் எஸ்.கே. கங்கா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

'புதிய தொழிற்பள்ளிகள் தொடங்க, அங்கீகாரம் புதுப்பிக்க விண்ணப்பிக்கலாம்'

தூத்துக்குடி, ஜன. 19: புதிய தொழிற்பள்ளிகள் தொடங்குதல், அங்கீகாரம் புதுப்பித்தல், தொழிற்பள்ளிகளில் புதிய தொழிற்பிரிவுகள், தொழிற்பிரிவுகளில் கூடுதல் அலகுகள் தொடங்குதல் ஆகியவற்றுக்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

2026–2027ஆம் கல்வியாண்டுக்கு புதிய தொழிற்பள்ளிகள் தொடங்குதல், அங்கீகாரம் புதுப்பித்தல், தொழிற்பள்ளிகளில் புதிய தொழிற்பிரிவுகள், தொழிற்பிரிவுகளில் கூடுதல் அலகுகள் தொடங்குதல் ஆகியவற்றுக்கு www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப கட்டணம், ஆய்வுக்கட்டணம் RTGS/NEFT மூலம் செலுத்த வேண்டும். அனைத்து தொழிற்பிரிவுகளுக்கும் சேர்த்து விண்ணப்ப கட்டணம் ரூ. 5,000, ஆய்வுக் கட்டணம் ரூ. 8,000 செலுத்த வேண்டும். பிப். 28–ஆம் தேதி விண்ணப்பிக்க கடைசி நாளாகும். அதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இதுகுறித்து கூடுதல் விவரங்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலமாகவும், detischennai@gmail.com என்ற மின்னஞ்சல், 044–22501006 (113) என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டும் தெரிந்துகொள்ளலாம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பகிரங்க அறிவிப்பு (அ) ஏல அறிவிப்பு

திருநெல்வேலி மாவட்டம், யூனியன் பாங்க் ஆப் இந்தியா. பாளையங்கோட்டை கிளை மூலம் திருநெல்வேலி மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் **ஆறுமுகம் பிள்ளை ஸ்டோர்க்கு 1.M/s.ஆறுமுகம் பிள்ளை புத்தக மையம், பங்குதாரர்கள்: திரு.A.ஜெகநாதன், J.சிவகாமி மற்றும் J.ஆறுமுகம். 1/25/14** திருச்செந்தூர் சாலை, வடக்கு பஜார் பாளையம்கோட்டை, திருநெல்வேலி - 627002. **2.**திரு.**A.ஜெகநாதன், S/o.**ஆறுமுகம் பிள்ளை, எண் **:25** வடக்கு உச்சிமாகாளி அம்மன் கோவில் தெரு, பாளையங்கோட்டை தாலுக்கா, திருநெல்வேலி **-627002. 3.**திருமதி. சிவகாமி (பங்குதாரர்) **W/o.**திரு.ஜெகநாதன், எண்:**25** வடக்கு உச்சிமாகாளி அம்மன் கோவில் தெரு, பாளையங்கோட்டை தாலுக்கா, திருநெல்வேலி **-627002. 4.**திரு.ஆறுமுகம் (பங்குதாரர்) **S/o.A.**ஜெகநாதன், **26-3** வடக்கு உச்சிமாகாளி அம்மன் கோவில் தெரு, பாளையங்கோட்டை தாலுக்கா, திருநெல்வேலி **-627002.** சொந்தமான கீழ்கண்ட சொத்தின் மீது நிறைவேற்றுதல் மனு இ.பி.**59/2023** என தாக்கல் செய்ததில் ஏலம் விட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின் படி **23.01.2026**ம் தேதி மாலை **4** மணியளவில் திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஏலம் விட போவதால் விருப்பம் உள்ளவர்கள் ஷை ஏலத்தில் கலந்து கொள்ளலாம் என்பதை இந்த ஏல அறிவிப்பின் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தபசில் சொத்து

திருநெல்வேலி ரிஜிஸ்ட்ரேசன் டிஸ்டிரிக்ட் ஷை ஜாயிண்ட் **1**ம் நம்பர் சப் டி ஸரகம் முன் திருநெல்வேலி முனிசிபல் **22** வது வார்டு தற்போது திருநெல்வேலி மாநகராட்சி **7**வது வார்டு மேல வீரராகவபுரம் கிராமம் மீனாட்சிபுரம் குறுக்குத்துறை ரோடு தென் சிரகில் டவுண் சர்வே வார்டு **10** பிளாக் **8** டவுண் சர்வே நம்பர் **730** பாகம் மனை கிழமேல் அடி **5**, தென்வடல் அடி **4** இதற்கு சதுர அடி **20**ம் இதன் தென்புரம் இரண்டாவது அளவு கிழமேல் அடி **43** தென்வடல் மேல்தலை அடி **42**, வை கீழ்தலை அடி **43** இதற்கு சதுரடி **552.5**ம் ஆக மொத்தம் சதுர அடி **572.5** உள்ள மனையும் அதில் கட்டப்பட்டுள்ள கதவு எண்கள் **5** அண்ட் **5A** மேல்பாகமாகவுள்ள அடித்தளத்தில் மட்டப்பாவும் அதன் மேல் மட்டப்பா போட்ட மாடியுமாகவுள்ள வீடு கட்டிடமும் ஷை வீட்டில் இணைக்கப்பட்டுள்ள மின்சார விளக்குகளும் அதன் உபகரணங்களும் மாநகராட்சி குடி தண்ணீர் குழாய் இணைப்பு ஒன்றும் மற்றும் சகல மாமூல் பாத்தியங்களும் உள்ள **இதற்கு எல்லையாவது: வடக்கே** : டி.எஸ்.**729/1** கிழமேல் தெரு **கிழக்கே** : டி.எஸ் பாகம் நம்பிலர் **2**வது நபர் சண்முக கந்தரத்திற்கு பாத்தியப்பட்ட **2**வது தபசில மனைவீடு பொதுச்சுவர் **தெற்கே:** டி.எஸ்.**732** நாராயண பிள்ளை வீடு **மேற்கே:** டி.எஸ்.**730** பாகம் ஆவுடையப்பத்தேவர் மனை வீடும் அதன் வடபுரம் டி.எஸ்.**729/1** கிழமேல் தெருவும் இந்த நான்கு எல்லைக்குட்பட்டது பூராவும்.தபசில் விபரம் சரி.

தேதி: 19.01.2026, யூனியன் பாங்க் ஆப் இந்தியா
இடம்: பாளையங்கோட்டை பாளையங்கோட்டை கிளை

விற்பனை அறிவிப்பு

இந்திய திவால் மற்றும் நொடிப்பு நிலை சட்டம் 2016-இன் கீழ்

சாலிம் ஷூஸ் பிரைவேட் லிமிடெட்

(கலைப்பு நிலையில்)

CIN: U19111TN2006PTC060267

பதிவு அலுவலகம்: எண் 1-A, ரீஜென்சி அபார்ட்மெண்ட், எண் 5, 1ஆவது சந்து, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600034, தமிழ்நாடு, இந்தியா.

தொழிற்சாலை வளாகம்:, 'A'-யூனிட் எண் 143/3, M.B.T.சாலை, வாலாஜா வட்டம், இராணிப்பேட்டை-632401. 'B'யூனிட் எண் 63/1, 63/2, அம்பூர் சாலை, மாந்தாங்கல் கிராமம், வாலாஜா வட்டம், இராணிப்பேட்டை-632404. 'G'-யூனிட் எண் 28/8B, சின்ன குக்குண்டூ, கலவை சாலை, ஆற்காடு, இராணிப்பேட்டை-632503. (கடன்தார பெருநிறுவனமானது தோல் & காலணி உற்பத்தியிலும் காலணி, தோல், தோல் பொருள்கள் ஏற்றுமதியிலும் ஈடுபட்டுள்ளது)

கடன்தார நிறுவனமான M/s.சாலிம் ஷூஸ் பிரைவேட் லிமிடெட் (கலைப்பு நிலையில்) நிறுவனத்தின் சொத்துக்கள், அவ்வப்பொழுது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்குட்பட்ட இந்திய திவால் மற்றும் நொடிப்பு நிலை வரிய (கலைப்பு நடவடிக்கை) ஒழுங்குமுறைகள் 2016, ஒழுங்குமுறை 32-இன் கீழ் மாண்பமை சென்னை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தால் அமர்த்தப்பட்ட கலைப்பு அலுவலர் மூலம் "மொத்தமாக" விற்பனைக்கு வைக்கப்படுகின்றன. இது "உள்ள இடத்தில் உள்ளபடி" எனும் அடிப்படையிலானது. விற்பனையானது "https://baanknet.com" எனும் e-ஏல இணையத்தளத்தில் நடைபெறும் (எண்ணிக்கை வரம்பின்றித் தலா 10 நிமிடங்கள் காலநீட்டிப்புடன்).

பார்வையிடும் நாள் : 21.01.2026 முதல் 09.02.2026 வரை
(காலை 10 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இடையில்)

மின்-ஏலம் நடைபெறும் நாள்: 12.02.2026 (வியாழக்கிழமை)

ஒதுக்கப்பட்ட நேரம்	சொத்து விவரம்	விற்பனை முறை	குறைந்தபட்ச கேட்பு விலை ரூ.	முன்பண வைப்பு தொகை ரூ.	ஏல உயர்வுத் தொகை ரூ.
ஒதுக்கீடு எண்-1 முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை	இருப்பு & சரக்குகள்	உள்ளது உள்ளபடி	21 இலட்சம்	02 இலட்சம்	1 இலட்சம்
ஒதுக்கீடு எண்- 2 பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை	ஆலை மற்றும் இயந்திரங்கள்	உள்ளது உள்ளபடி	05.40 கோடி	50 இலட்சம்	3 இலட்சம்
ஒதுக்கீடு எண்-3 மாலை 4:30 மணி முதல் மாலை 6 மணி வரை	நிலம் மற்றும் கட்டிடம்	உள்ளது உள்ளபடி	36.00 கோடி	250 இலட்சம்	5 இலட்சம்

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :

1. இந்த விற்பனையானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ளது உள்ளவாறு", "திரும்பப் பெறப்பட மாட்டாது" எனும் அடிப்படையில் மின்-ஏல முறையில் மட்டுமே நடைபெறும்.
2. முன்பண வைப்பு தொகையை htttps://baanknet.com இணையத்தள wallet-இல் செலுத்த வேண்டும்.
3. ஏலப்புள்ளியை பரிந்துரைக்கப்பட்ட முறையில் இணைய வழியில் மட்டுமே முன்வைக்க வேண்டும்.
4. முன்பண வைப்பு தொகையையும் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களையும் தாக்கல் செய்யக் கடைசி நாள் : **10.02.2026**.
5. மின்-ஏல விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய htttps://baanknet.com இணையத்தளத்தில் உள்ள ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தை / ஏல நடைமுறைக் குறிப்பாணையைப் பாருங்கள். அல்லது கலைப்பு அலுவலரை saalim.liquidation@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள். மின்-ஏல நடைமுறை பற்றி அறியத் தொடர்பு கொள்ளுங்கள்: support.baanknet@psballiance.com.
6. ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் / ஏல நடைமுறைக் குறிப்பாவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றில் எதையும் சேர்க்கவோ, திருத்தவோ, ரத்துச் செய்யவோ மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தக் காலக்கெடுவையும் நீட்டிக்கவோ கருக்கவோ கலைப்பு அலுவலருக்கு உரிமை உண்டு. மேலும், எந்தக் காரணமும் முன்வைக்காமல், எந்த ஏலப்புள்ளியையும் ஏற்கவோ நிராகரிக்கவோ அன்னாருக்கு உரிமை உண்டு.
7. 30 நாள்களுக்குப் பிறகு செலுத்தப்படும் தொகைகளுக்கு ஆண்டுக்கு 12% என்ற விகிதத்தில் வட்டி உண்டு. மேலும், ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் / ஏல நடைமுறைக் குறிப்பாவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் தொகை வரப்பெறாவிட்டால் முடிக்கப்பட்ட விற்பனை ரத்து செய்யப்படும்.
8. நிலம் மற்றும் கட்டிடத்தின் விற்பனையானது ஆலை மற்றும் இயந்திரங்களின் இருப்பு & சரக்குகள் விற்பனை முடிவடைவதைப் பொருத்தது.
9. நிலம் மற்றும் கட்டிடம் "உள்ளது உள்ள இடத்தில்" எனும் அடிப்படையில் மட்டுமே ஒப்படைக்கப்படும்.
10. ஏலதாரர்கள் அனைத்து தொகுப்புகளுக்குமோ அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றுக்கோ ஏலம் கோரலாம்.
11. இராணிப்பேட்டையில் உள்ள தொழிற்சாலை வளாகத்தினை பார்வையிட 21.01.2026 முதல் 09.02.2026 வரை, முற்பகல் 11 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இடையில் முன்கூட்டியே நேரம் பெற்றுக் கொண்டு வரலாம். தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி - saalim.liquidation@gmail.com.

முனைவர். S.R. ஸ்ரீராம் சேகர்,
கலைப்பு அலுவலர்
சாலிம் ஷூஸ் பிரைவேட் லிமிடெட் (கலைப்பு நிலையில்)
saalim.liquidation@gmail.com
IBBI/IPA-003/IP-N000144/2017-2018/11598

இடம்: சென்னை-20 11, பிரபாக் அபார்ட்மெண்ட்ஸ், 8-15, காந்தி நகர்
நாள்: 19.01.2026 முதல் பிரதான சாலை, அடையாறு, சென்னை-600020.

TAMIL NADU URBAN HABITAT DEVELOPMENT BOARD
SUPERINTENDING ENGINEER, CHENNAI EAST - 1 CIRCLE
NOTICE INVITING e- TENDER (Retender)
TENDER REFERENCE NO.TNUHDB/92/HD/SE(East -1)/2025

**1. Name of the work: Construction of 131 tenements (S+9